## துறையூர் நகராட்சி

2020ஆம் வருடம் மார்ச் மாதம் 30.03.2020ஆம் திங்கள் கிழமை (தமிழ் விகாரி வருடம் பங்குனி மாதம் நாள்.17) பிற்பகல்4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட்ட சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை:திரு.து. தமயந்தி,
தனி அலுவலர்

| **மன்ற கூட்டம் நடை பெற்ற நாள்** | **வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்** | | **மன்றத்தின் தீர்மானம்** |
|---|---|---|---|
| 30.03.2020 | **01** | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) மார்ச் மாதம் 2020 நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு :**பதிவு செய்யலாம். | தீர்மான எண்:355 பதிவு செய்யப்பட்டது. |
| 30.03.2020 | **02** | துப்பரவு அலுவலர் மார்ச் மாதம் 2020 நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அ.கு :**பதிவு செய்யலாம். | தீர்மான எண்:356 பதிவு செய்யப்பட்டது. |

<table>
<tr>
<td>30.03.2020</td>
<td>03</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம், நகராட்சி ஆடுவதைத செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், சுவாமிநாதன் தினசரிமார்கெட் கடைகள் 7,14,15,16,17,18,34,43,44 மற்றும் 45 க்கான குத்தகை உரிமம், வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலகவளாக புதிய கடை எண் 2,4,5,9,10 மற்றும் 18 கடைகளுக்கும் குத்தகை உரிமங்கள் 2020-2021, முதல் 2022-2023 முடிய மூன்றாண்டுக்கான உரிமம் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 20.02.2020-ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்ட நாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>மக்கள்குரல், திருச்சி பதிப்பு</td><td>04.02.2020</td><td>ரூ.16,128/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ADWAVE ADVERTISING RIVATE LTD, CHENNAI, நிறுவனம் ரூ.16,128/- வழங்க கேட்டுக்கோன்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.380/2020/அ1)<br>
அலுவலக குறிப்பு: அ)அனுமதிக்கலாம்.<br>
ஆ)செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யலாம்.</td>
<td>தீர்மான எண்:357 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.03.2020</td>
<td>04</td>
<td>நகராட்சிக்கு சொந்தமான சுவாமிநாதன் தினசரி மார்க்கெட் கடை எண் 18 ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.03.2020 நடைபெற்றதில் திரு.பி.கோபாலகிருஷ்ணன் மற்றும் எஸ்.முத்துசாமி இருவர் ஏல பொறுப்புத்தொகை செலுத்தியுள்ளார். கீழ்க்கண்ட இரு நபர்கள் ஏலத்தில் கலந்துகொண்டு ஏல கேள்வி கேட்டுள்ளார்கள். அதன் விபரம்.
<table>
<tr><th>வ.எ</th><th>ஏலதாரர் பெயர்</th><th>உயர்ந்தபட்ச மாத வாடகை ஏல</th></tr>
</table></td>
<td>தீர்மான எண்:358 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>ண்.</th><th></th><th>கேள்வி</th></tr>
<tr><td>1.</td><td>பி. கோபாலகிருஷ்ணன்</td><td>ரூ.2300/-</td></tr>
<tr><td>2.</td><td>எஸ். முத்துசாமி</td><td>ரூ.2275/-</td></tr>
</table>
மேற்காணும் ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறவில்லை. மேற்படி ஏலத்தில் திரு.பி.கோபாலகிருஷ்ணன் என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.2300/- கேட்டுள்ளார். அன்னார் கேட்டுள்ள இம்மாத வாடகையானது இதற்கு முன் உள்ள மாத வாடகை ரூ.2100/-க்கு மேல் உள்ளதால் திரு.பி.கோபாலகிருஷ்ணன் என்பவரது உயர்ந்தபட்ச மாதவடகை கேள்வியை ஊர்ஜிதம் செய்யலாம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண்.380/2020/அ1)<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.03.2020</td>
<td>05</td>
<td>
இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 05.03.2020ம் தேதி கோரப்பட்டது. வரிசை எண்கண்டுள்ள கடை எண்.18க்கு மட்டும் ஏலதாரர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு கடை மாதவாடகைக்கு விடப்பட்டது. மேலும் வரிசை எண் 1,2, மற்றும் 5ல் கண்டுள்ள இனத்திற்கு ஏல பொறுப்புத்தொகை எவரும் செலுத்தாததால் ஏலக் கேள்வி ஏதும் இல்லை. மேலும் இவ் இனத்தில் கண்ட வரிசை எண் 2,4,5 ல் கண்டுள்ள குத்தகை இனம் நகராட்சி பொறுப்பில் இருந்தால் இவ்வினத்திற்கு கேட்பு இல்லை. மேலும் மேற்காணும் இனங்களுக்கு மறு ஏலம் கோர மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>குத்தகை இனம் விபரம்.</th></tr>
<tr><td>1.</td><td>துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம்.</td></tr>
<tr><td>2.</td><td>நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் குத்தகை உரிமம்.</td></tr>
<tr><td>3.</td><td>துறையூர் நகராட்சி சுவாமிநாதன் தினசரி மார்க்கெட்</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்:359 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>கடைகள், 8,7,14,15,16,17,18,34,42,43,44 மற்றும் 45க்கான குத்தகை உரிமம் (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.)</td></tr>
<tr><td>4.</td><td>வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16 மற்றும் 17 (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.)</td></tr>
<tr><td>5.</td><td>துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலக வளாக புதிய கடை எண் 2,4,5,9,10 மற்றும் 18 (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.)</td></tr>
</table>
(ந.க.எண்.380/2020/அ1)<br>
அலுவலக குறிப்பு:<br>
மேற்காணும் குத்தகை இனங்கள் 1,2,3,4,5 ஆகியவற்றில் கண்டுள்ள இனங்கள் நகராட்சி பொறுப்பில் உள்ளதால் கேட்பு இல்லை என்பதை மன்றம் பதிவு செய்யலாம். மேலும் வரிசை எண் 1,2,3,4,5ல் கண்டுள்ள இனங்கள் மறு ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.03.2020</td>
<td>06</td>
<td>துறையூர் நகராட்சி வார்டு எண்.21 தியாகி சிங்கார வேலர் தெருவில் இயங்கி வருகின்ற BSNL நிறுவனத்திற்கு சொந்தமான கட்டிடங்களுக்கு சொத்துவரி வசூல் செய்வது தொடர்பாக அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜ ராஜன் அவர்களிடம் இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1377/2018/அ1 நாள்.06.03.2020-ன் படி சென்னை உயர் நீதிமன்ற மேல் முறையீடு வழக்கு எண்.WA(MD) Nos.328 to 335/2018. CMP (MD/WS.6801 to 6808/2018, Review Application (MD) No.77/2018 நாள்.21.12.2018-ன் நீதி மன்ற உத்தரவிற்கு சட்டகருத்துரு வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி அரசு வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன் அவர்களும் கடிதம்.10.03.2020-ல் உரிய சட்ட கருத்துரு Legal Opinion வழங்கி உள்ளார்கள் ஆதலால் சட்ட கருத்துரு வழங்கியமைக்கு கட்டணம் ரூ.10,000/- வழங்க கேட்டு கடிதம் அனுப்பி உள்ளார்</td>
<td>தீர்மான எண்:360 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஆதலால் மேற்படி தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1377/2018/அ1)<br>**அலுவலக குறிப்பு:** 1.அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | |
| 30.03.2020 | **07** | இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 20.02.2020, 27.02.2020, 05.03.2020 மற்றும் 12.03.2020 ஆகிய தேதிகளில் கோரப்பட்டதில் 20.02.2020ம் தேதியில் மூன்று நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி யாரும் கோரவில்லை. 27.02.2020, 05.03.2020 மற்றும் 12.03.2020 ஆகிய தேதிகளில் யாரும் ஏலப்பொறுப்பு தொகை செலுத்தப்படாமல் உள்ளது.<br>வருவாய் ஆய்வர் அவர்களது அறிக்கையினை பரிசிலனை செய்யப்பட்டது. இதன்படியும் நிர்வாக நலன்களை கருதியும் முந்தைய ஆண்டு ஏல பொறுப்பு தொகை ரூ.3,00,000/- லட்சத்திற்கு கூடுதலாக ரூ. 2,00,000/. சேர்த்து நிர்ணயம் செய்யப்படுகிறது. தற்பொழுது நடந்த வரும் ஏல அறிவிப்பில் உள்ள ஏல பொறுப்பு தொகை ரூ.1,00,000/- மாற்றி ரூ.5,00,000/- லட்சமாக திருத்தம் செய்வதை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/- மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண்.380/2020/அ1)<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்:361 அனுமதிக் கப்பட்டது |
| 30.03.2020 | **08** | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். 5437/J1/2020 நாள்.09.03.2020-ல் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் காய்ச்சல்(COVID-19) கொடிய தொற்று நோய் வராமல் இருக்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரைகள் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி செயல்பட பொது சுகாதார கிருமி | தீர்மான எண்:362 அனுமதிக் கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>நாசினி பொருட்கள் மற்றும் கைதொளிப்பான்கள் திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்கோ சர்வ் கூட்டுறவு நிறுவனத்தில் இருந்து வாங்கி கொள்ளலாம். இந்நிறுவனத்தில் வாங்கிக்கொள்ள அரசு இணைச்செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் மேற்காணும் நிறுவனத்தில் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) சம்மந்தமான பொருட்களை வாங்கிக்கொள்ள பரிந்துரைசெய்யுதுள்ளார்கள் இதன் படி வாங்கிக்கொள்ள உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .(ந.க.எண்.810/2020/H1)<br>அலுவலக குறிப்பு : 1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.ஆணையரின் முன் அனுமதிபெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>30.03.2020</td><td>09</td><td>துறையூர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி தொழில்வரி, குடிநீர் கட்டணம், மற்றும் வரியில்லா இனங்கள் ஆகியவற்றை நிலுவையின்றி உடனடியாக செலுத்தி நகராட்சிக்கு ஒத்துழைப்பு வழங்ககோரி பொதுமக்கள் அறியும் விதமாக நகர் முழுவதும் உள்ள 24 வார்டுகளிலும் அறவிப்பினை மைக்செட்டு வைத்து ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய, விலைப்புள்ளி 11.03.2020 ஆம் கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்.</td><td>வேலையின் பெயர்</td><td>வை.சேகரன்சவுண்ட் சர்வீஸ் ஸ்ரீ பாலக்காட்டு மாரியம்மன் கோவில் தெரு, துறையூர்</td><td>வை.கணேசன் சவுண்ட் சர்வீஸ் கடைவீதி, துறையூர்.</td><td>பூபதிசவுண்ட் சர்வீஸ் பி.எம்.கே. கோவில்தெரு, துறையூர்.</td></tr>
</table></td><td>தீர்மான எண் :363 அனுமதிக் கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr>
<td>1</td>
<td>துறையூர் நகராட்சிக்கு சொத்துவரி, தொழில்வரி, குடிநீர்கட்டணம், செலுத்தகோரும் அறிவிப்புக்கான ஆட்டோவாடகை, மைக், பேட்டரி கேசட்பதிவு, ஓட்டுநர்படி உட்பட</td>
<td>ரூ.1850/-<br>(நாள் ஒன்றுக்கு)</td>
<td>ரூ.2100/-<br>(நாள் ஒன்றுக்கு)</td>
<td>ரூ.2000/-<br>(நாள் ஒன்றுக்கு)</td>
</tr>
</table>
(ந.க.எண்.1028/2020/அ1)<br>
அலுவலக குறப்பு:வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த வை.சேகரன் சவுண்ட் சர்வீஸ் துறையூர். அவர்களின் விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.03.2020</td>
<td>10</td>
<td>துறையூர் நகராட்சியின் 2010-11ம் ஆண்டு தணிக்கையின்போது பணிப்பதிவேடுகளை தணிக்கை முடியும் நாள் வரை சரிபார்த்ததில் திரு.ஜி.காமராஜ் மருத்துவ அலுவலர் 31.03.2013ல் ஓய்வு பெற்றதை முன்னிட்டு மே 2013ல் வழங்கப்பட்ட 240 நாட்களுக்கான ஈட்டிய விடுப்பு மற்றும் 90 நாட்களுக்கான ஈட்டா விடுப்பிற்கு வருமானவரி பிடித்தம் செய்யப்படாத விபரம் தணிக்கையில் கண்டறியப்பட்டும் அவ்வாறு வழங்கும் போது எதிர்வரும் காலத்திற்கு (2013-2014) வழங்கப்படவிருக்கும் ஓய்வூதியத்தினையும் சேர்த்து ஒட்டு மொத்த தொகைக்கு வருமான வரி பிடித்தம் செய்யப்பட வேண்டும் எனவும் இந்நடைமுறை பின்பற்றப்படாமல் முழுத்தொகையும் வழங்கப்பட்ட விபரம் தணிக்கையில் கண்டறியப்பட்டுள்ளது என தெரிவித்து தணிக்கை தடை எழுப்பட்டுள்ளது.<br>
இத்தணிக்கை தடையில் வருமான வரித்துறை சுற்றறிக்கையை சுட்டிக்காட்டி சுற்றறிக்கை எண்.8.2010 நாள் 3.12.2010 மற்றும் சுற்றறிக்கை எண் 05.2011(F.No.275/192/2011-</td>
<td>தீர்மான எண்:364 ஒப்புதல் வழங்கங்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 11 | IT(B) ன்படி இந்திய வருமானவரி சட்டம் 1961ன் பிரிவு 192ன் கீழ் மைய அரசு/மாநில அரசுப் பணியாளர் அல்லாத இதர நிறுவனங்களின் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு அளிக்கப்படும் ஈட்டிய விடுப்பு காசாக்குதலுக்கான தொகைக்கு அதிகபட்சம் ரூ.3.00 வரையிலான தொகைக்கு மட்டுமே வருமான வரி விலக்களிக்கப்பட வேண்டும் எனவும் அத்தொகைக்கு மேற்படின் வருமான வரி பிடித்தம் செய்யப்பட வேண்டும் எனவும், ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்புக்கான தொகை காசாக்கி வழங்கப்பட்ட இனங்களில் (Encashment of UEL on PA) அத்தொகை முழுவதற்கும் வருமான வரி பிடித்தம் செய்யப்பட வேண்டும் என தெரிவித்து தணிக்கைத் தடை எழுப்பப்படுள்ளது. இந்நிகழ்விற்கு பின் தான் வருமான வரி தொகை பிடித்தம் செய்து வருமான வரி கணக்கில் செலுத்தப்பட்டது.<br>இந்நிலையில் மனுதாரர் 14.08.2018ம் தேதிய மனுவில் வருமான வரி பிடித்தம் செய்த தொகை ரூ.120670/- வழங்க கோரி மனு பெறப்பட்டது. தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தடையினை தொடர்ந்து தான் இத்தொகை பிடித்தம் செய்யப்பட்டு வருமான வரி அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. இவற்றில் விதிமீறல்கள் எதுவும் நடைபெறவில்லை. எனவே இத்தொகை திரும்ப பெறுவது தொடர்பான விபரங்களை வருமான வரி அலுவலகத்தினை அணுகி பெற்றுக்கொள்ள இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண்.3431/சி1/2018 நாள் 14.09.2018. மூலம் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அன்னார் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடந்துள்ளார். இவ்வழக்கில் இந்நகராட்சி சார்பாக திரு.எம்.ராஜராஜன், வழங்க கோரியுள்ளார். இத்தொகையினை வழங்க மனறத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. (**ந.க.எண்.**4220/2019/**சி**1)<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | |
| 30.03.2020 | **11** | துறையூர் நகராட்சி வார்டு எண்.3 பூங்கா சந்து இயங்கி வருகின்ற SRM Public School கட்டிடத்திற்கு சொத்துவரி விதிப்பு எண்.087/003/00661 மற்றும் 087/003/00662 என இரண்டு வரி விதிப்புகள் செய்யப்பட்டது. இவ்வரி விதிப்புகளுக்கு தமிழ் நாடு அரசிதழ் எண்.33 நாள்.25.01.2018-ன் படியும் அதனை தொடர்ந்து அரசாணை எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடி நீர் வழங்கல் துறை (MA.IV) நாள்.19.11.2019-ன் படி நிர்ணயிக்கப்பட்ட சொத்துவரிக்கான கேட்பு அறிவிப்பு SRM Public School முதல்வரிடம் நேரில் 03.02.2020-ம் தேதியில் நேரில் சார்வு செய்யப்பட்டது.<br>மேற்படி பள்ளியின் தாளாளர் அவர்களின் கடிதம் 18.02.2020-ம் தேதிய கடிதத்தில் சொத்துவரி வரிவிதிப்பு எண்கள் 087/003/00661 மற்றும் 087/003/00662-ல் கண்டுள்ள கட்டிட அளவுகள் | தீர்மான எண்:365 அனுமதிக் கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | தவறாக உள்ளது எனவும் மேற்படி பள்ளிக்கட்டிடத்தின் கட்டிட அளவை மறு அளவீடு செய்து அதற்கு உரிய சொத்துவரி விதிப்பு செய்து வழங்க கோரியும் மற்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ள இரண்டு வரி விதிப்புகளையும் சேர்த்து ஒரே வரி விதிப்பாக சொத்து வரி நிர்ணயம் செய்து வழங்க கோரியுள்ளார்.<br>SRM பள்ளி தாளாளர் அவர்களின் விண்ணப்பத்தை 17.03.2020-ம் தேதியில் பரிசீலனை செய்து இக்கட்டிடத்தின் அளவீடை மறு அளவீடு செய்ய ஒரு சிறப்பு கூட்டுக் குழு அமைத்து அளவீடு செய்ய அனுமதிக்கப்பட்டதின் படி நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ), மேலாளர், வருவாய் ஆய்வர், மற்றும் சம்மந்தப்பட்ட வார்டின் வருவாய் உதவியாளர் ஆகியோர் அடங்கிய சிறப்பு குழு 19.03.2020-ம் தேதியில் SRM Public School கட்டிடத்தை தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மற்றும் மூன்றாம் தளம் ஆகியவற்றை மறு அளவீடு செய்து அதற்கு உரிய வரைபடத்துடன் அறிக்கையினை 19.03.2020-ம் தேதியில் சமர்ப்பித்துள்ளது.<br>இவ்வறிக்கையில் 16.08.2018-ல் நகரமைப்பு ஆய்வர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் SRM Public School கட்டிடம் அளவீடு செய்யப்பட்டதை கூர்ந்தாய்வு செய்து மறு அளவீடு செய்யப்பட்டது இதில் சொத்துவரி விதிப்பு எண்.087/003/00661-க்குரிய அளவீடு ஏற்கனவே அளவீடு செய்த போது மாணவர் விடுதியின் கட்டிடத்தையும் சேர்த்து அளவீடு செய்யப்பட்டதை தற்போது மறு அளவீடு செய்தபோது தான் தெரிய வருகிறது. தற்போது மாணவர் விடுதி கட்டிடத்தின் அளவை நீக்கம் செய்து SRM பள்ளி கட்டிடத்தை மட்டும் சரியான அளவீடு செய்யப்பட்டது, மற்றும் ஒரு சொத்துவரி விதிப்பு எண்.087/003/00662 மறு அளவீடு செய்யப்பட்டதில் ஏற்கனவே அளவீடு செய்யப்பட்டதற்கும் தற்போது அளவீடு செய்யப்பட்டதற்கும் வேறுபாடு ஏதும் இல்லை.<br>SRM Public School தாளாளர் அவர்கள் தனது 18.02.2020-ம் தேதிய கடிதத்தில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சொத்து வரி விதிப்பு எண்.087/003/00661 மற்றும் 087/003/00662 ஆகிய இரண்டு வரிவிதிப்புகளையும் 01.10.2017 முதல் நிரந்தரமாக நிலுவை தொகையுடன் நீக்கம் செய்யவும், மற்றும் 19.03.2020ம் தேதியில் சிறப்புக்குழு மூலம் மறு அளவீடு செய்யப்பட்ட விபரப்படி உள்ள மொத்த சதுர அடி 43650-க்கு புதிய சொத்து வரி 01.10.2017 முதல் சொத்து வரி விதிக்க SRM Public School தாளாளர் அவர்களுக்கு சிறப்பு கேட்பு அறிவிப்பு சார்வு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. .(ந.க.எண்.655/2020/அ1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.03.2020 | 12 | துறையூர் நகராட்சியின் வருவாய் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகியவற்றின் 2019-20ம் நிதி ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கைக்கும் 2020-21ம் நிதி ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட வருவாய் மூலதன நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி | தீர்மான எண்: 366 பதிவு செய்யப்ப |

<table>
<tr><td></td><td></td><td>நிதிக்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை (Budget) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.740/2020/பி1)<br>அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.</td><td>ட்டது</td></tr>
<tr><td>30.03.2020</td><td>13</td><td>நகராட்சிக்கு சொந்தமான சுவாமிநாதன் தினசரி மார்க்கெட் கடை எண் 8 ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2020 நடைபெற்றதில் திரு.பி.கோபாலகிருஷ்ணன் மற்றும் எஸ்.முத்துசாமி இருவர் ஏல பொறுப்புத்தொகை செலுத்தியுள்ளார். கீழ்க்கண்ட இரு நபர்கள் ஏலத்தில் கலந்துகொண்டு ஏல கேள்வி கேட்டுள்ளார்கள். அதன் விபரம்.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஏலதாரர் பெயர்</th><th>உயர்ந்தபட்ச மாத வாடகை ஏல கேள்வி</th></tr>
<tr><td>1.</td><td>பி. கோபாலகிருஷ்ணன்</td><td>ரூ.1900/-</td></tr>
<tr><td>2.</td><td>எஸ். முத்துசாமி</td><td>ரூ.1875/-</td></tr>
</table>
மேற்காணும் ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறவில்லை. மேற்படி ஏலத்தில் திரு.பி.கோபாலகிருஷ்ணன் என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.1900/- கேட்டுள்ளார். அன்னார் கேட்டுள்ள இம்மாத வாடகையானது இதற்கு முன் உள்ள மாத வாடகை ரூ.1700/-க்கு மேல் உள்ளதால் திரு.பி.கோபாலகிருஷ்ணன் என்பவரது உயர்ந்தபட்ச மாதவடகை கேள்வியை ஊர்ஜிதம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.380/2020/அ1)<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்</td><td>தீர்மான எண்:367 அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>30.03.2020</td><td>14</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை உரிமம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 24.03.2020ம் தேதி கோரப்பட்டது. வரிசை எண் 1,2,3,(கடை எண் 8 தவிர) 4 மற்றும் 5ல் கண்டுள்ள கடைகளுக்கு யாரும் ஏலப்பொறுப்புத்தொகை செலுத்தப்படவில்லை. இதனால் ஏலம் நடத்தப்படவில்லை. மேலும் இவ்வினத்தில் கீழ்கண்ட வரிசை எண் 2,3,4 மற்றும் 5ல் கண்டுள்ள குத்தகை இனம் மற்றம் கடைகள் நகராட்சி பொறுப்பில் இருந்தால் இவ்வினத்திற்கு கேட்பு இல்லை. மேலும் மேற்காணும் இனங்களுக்கு மறு ஏலம் கோர மன்றத்தின்</td><td>தீர்மான எண்:368 அனுமதிக் கப்பட்டது</td></tr>
</table>

ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | குத்தகை இனம் விபரம். |
|---|---|
| 1. | துறையூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம். |
| 2. | நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் குத்தகை உரிமம். |
| 3. | துறையூர் நகராட்சி சுவாமிநாதன் தினசரி மார்க்கெட் கடைகள், 15,16,17,34,42,43,44 மற்றும் 45க்கான குத்தகை உரிமம் (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.) |
| 4. | வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16 மற்றும் 17 (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.) |
| 5. | துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் பழைய நகராட்சி அலுவலக வளாக புதிய கடை எண் 2,4,5,9,10 மற்றும் 18 (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.) |

ந.க.எண்.380/2020/அ1

**அலுவலக குறிப்பு**:

மேற்காணும் குத்தகை இனங்கள் 2,3,4,5 ஆகியவற்றில் கண்டுள்ள இனங்கள் நகராட்சி பொறுப்பில் உள்ளதால் கேட்பு இல்லை என்பதை மன்றம் பதிவு செய்யலாம். மேலும் வரிசை எண் 1,2,3,4,5ல் கண்டுள்ள இனங்கள் மறு ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 30.03.2020 | 15 | துறையூர் நரகாட்சிக்கு குழாய் பொருத்துனராக பணிபுரிந்து வரும் திரு.தா.நீலமோகன் என்பவரை தற்காலிமாக பணி நீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண் WP No.8713 of 2019-ல் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் துறையூர் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்திட திரு.எம்.ராஜராஜன், அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை, மதுரை-23 என்பவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அன்னார் இவ்வழக்கில் ஆஜராகி நடத்திட வழக்காடு கட்டணமாக ரூ.10000/- வழங்கிட கோரி கேட்பு அனுப்பியுள்ளார். அன்னாருக்கு வழக்காடு கட்டணம் ரூ.10000/- வழங்கிட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.(ந.க.எண்.3988/சி1/2018)<br>**அலுவலக குறிப்பு**:அனுமதிக்கலாம் | தீர்மான எண்:369 அனுமதிக் கப்பட்டது |
| 30.03.2020 | 16 | துறையூர் நரகாட்சிக்கு சொந்தமான அண்ணாபேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம் 2020-2021ம் ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 20.02.2020, 27.02.2020, 05.03.2020, 12.03.2020, 24.03.2020, மற்றும் 31.03.2020 ஆகிய தேதிகளில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் யாரும் எடுத்து நடத்திக்கொள்ள முன் வரவில்லை. எனவே, துறையூர் நகராட்சி மூலம் துறை சார்பாக வசூல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது, முதல் கட்டமாக மூன்று மாதங்களுக்குண்டான பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்திட டோக்கன், வரிசை எண்கள் 1 முதல் 25000 வரை அச்சிட்டு பெற்றுக்கொள்ள தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட் கோ சர்வ் தொழிற்கூட்டுறவு சங்கம் லிட், திருச்சிராப்பள்ளி அவர்களிடமிருந்து அச்சிட்டு பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் தேவைப்படின் மேலும் டோக்கன்கள் அச்சிட்டு பெறுவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ.50,000/- செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1029/2020/அ1)<br>**அலுவலக குறிப்பு**:மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:370 அனுமதிக் கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 30.03.2020 | **17** | 2018–2019ம் ஆண்டு தணிக்கை தடை எண் 18 கல்வி நிதியில் கணக்கு எண் 3502013வருமான வரி ரூ.7888/-ம் மற்றும் கணக்கு எண் 3502015 மதிப்பு கூட்டுவரி ரூ.7140/-மொத்தம் ரூ.15028/- மட்டும் ஆரம்ப கல்வி நிதியில் பிடித்தம் செய்யப்பட்டு அரசு தலைப்பில் செலுத்தப்படாதது குறைபாடு என தணிக்கையில் தடை எழுப்பப்பட்டுள்ளது.<br>தணிக்கை தடையில் சுட்டிக்காட்டப்பட்ட அரசுப் பிடித்தங்கள் தணிக்கை ஆண்டு 2018-2019ல் பிடித்தம் செய்யப்படவில்லை. பின்னர் எந்த ஆண்டில் ரூ.15028/-அரசு பிடித்தம் செய்யப்பட்டது என Payment Book 2011-2012 முதல் 2017-2018 முடிய Verified செய்யப்பட்டது. எந்த ஆண்டில் மேற்படி பிடித்தம் செய்யப்பட்டது என அறிய இயலவில்லை. தற்பொழுது 2018-2019ம் ஆண்டு கணக்கு சரி செய்யப்படும்போது கல்வி நிதியில் Liability யில் கணக்கு எண் 3502013 வருமான வரி ரூ.7888/- எனவும் கணக்கு எண் 3502015 மதிப்பு கூட்டு வரி ரூ.7140/- எனவும் கணக்குக்கு எடுத்து கணக்கு முடிக்கப்பட்டுள்ளது.<br>2011-2012 ஆண்டு முதல் 2018-2019ம் ஆண்டு வரை மேற்படி அரசு பிடித்தமானது எந்த ஒப்பந்ததாரருக்கு, எந்த பணிக்கு என்ற விவரம் கிடைக்கப்பெறவில்லை. இந்நிலையில் Liability யில் உள்ள மேற்படியான அரசு பிடித்தங்களை GJV மூலம் கல்வி நிதியில் Liability யிலிருந்து Income க்கு மாற்றிக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.740/2020/பி1)<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:371 அனுமதிக் கப்பட்டது |
| 30.03.2020 | **18** | துறையூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மூன்று எண்ணிக்கை சமுதாய உரக்கிடங்கு அமைக்கப்பெற்று நகர் பகுதியிலிருந்து பெறப்படும் குப்பைகளை இயற்கை உரமாக்கி அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் தினசரி மார்க்கெட்டில் சேகரமாகும் பெரிய அளவிலான காய்கறி கழிவுகளை சிறுசிறு துண்டுகளாக்கி மேற்படி சமுதாய உரக்கிடங்கில் உரமாக்குவதற்கு Bio Shredding Machine) | தீர்மான எண்:372 அனுமதிக் கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்முதல் செய்வதற்கு ஆகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.842/2020/இ1<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் திடக்கழிவு மேலாண்மை பயனாளர் கட்டண நிதி (SUC Fund) 2019-20ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.03.2020 | **19** | துறையூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மூன்று எண்ணிக்கை சமுதாய உரக்கிடங்கு அமைக்கப்பெற்று நகர் பகுதியிலிருந்து பெறப்படும் குப்பைகளை இயற்கை உரமாக்கி அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கிடைக்கப்பெறும் பிளாஸ்டிக் கழிவுகளை சேகரம் செய்து அப்புறப்படுத்த ஏதுவாக Plastic Bailing Machine கொள்முதல் செய்வதற்கு ஆகும் செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.842/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினம் திடக்கழிவு மேலாண்மை பயனாளர் கட்டண நிதி (SUC Fund) 2019-20ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:373 அனுமதிக் கப்பட்டது |
| 30.03.2020 | **20** | துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் தங்கு தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யும் போது அவ்வப்போது ஏற்படும் அடைப்பு மற்றும் திடீர் உடைப்புகளினால் குடிநீர் விநியோகம் தடைபடும் சூழ்நிலை உருவாகிறது.<br>எனவே, பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் அடைப்பினை சரி செய்யவும் மற்றும் திடீர் உடைப்பினை சரி செய்யவும் 2020-21ம் ஆண்டிற்கு குடிநீர் பராமரிப்பு பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி | தீர்மான எண்:374 அனுமதிக் கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டப்படுகிறது.( ந.க.எண்.844/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.03.2020 | **21** | துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் ஆழ்துளை கிணறு மூலம் மினி பவர் பம்பு மற்றும் கைபம்பு அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு நீரளிப்பு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வப்போது ஏற்படும் மின்மோட்டார் மற்றும் கைபம்புகளில் பழுதுகளை சரிசெய்து பராமரிப்பு பணியினை மேற்கொள்ள 2020-21ம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.844/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்:375 அனுமதிக் கப்பட்டது |
| 30.03.2020 | **22** | துறையூர் நகராட்சியில் பெரிய ஏரியில் உள்ள கிணற்றில் புதிதாக மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.844/2020/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:376 அனுமதிக் கப்பட்டது |
| 30.03.2020 | **23** | நகராட்சி நிர்வாக ஆணையர் புதிய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டதற்கு உள்ளாட்சி அமைப்புகளின் பங்குத்தொகையாக கீழ்கண்ட விபரப்படி நான்காவது தவணைத்தொகை செலுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.30322/2012/இ3 நாள்.15.02.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>Sl.No \| Name of the ULB \| 4th Instalment | தீர்மான எண்:377 அனுமதிக் கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td><table><tr><td>1</td><td>Corporation</td><td>Rs.5,82,860 (Each)</td></tr><tr><td>2</td><td>Spl. Grade</td><td>Rs.4,53,330 (Each)</td></tr><tr><td>3</td><td>Select. Grade</td><td>Rs.5,51,110 (Each)</td></tr><tr><td>4</td><td>1st Grade</td><td>Rs.3,00,000 (Each)</td></tr><tr><td>5</td><td>2nd Grade</td><td>Rs.1,63,638 (Each)</td></tr></table>மேற்கண்ட விபரப்படி துறையூர் நகராட்சி (Selection Grade)-ன் பங்குத்தொகையாக தொகை ரூ.5,51,110/- மட்டும் Urban Administration Building Society-க்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ( ந.க.எண்.603/2020/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>30.03.2020</td><td>24</td><td>மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.31/செ.ம.தொ/2020 நாள்.07.02.2020-ன் படி தமிழக அரசின் மூன்றாண்டு சாதனை மலர் தயார் செய்திட துறையூர் நகராட்சியில் 2017-18, 2018-19 மற்றும் 2019-20ம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டப்பணிகளின் விபரம், செய்தி மக்கள் தொடர்பு துறை, திருச்சிராப்பள்ளி மூலம் தினசரி நாளிதழில் (மாலைமலர்) விளம்பரம் செய்யப்பட்டமைக்கு தொகை ரூ.9744/- மட்டும் மாலைமலர் திருச்சிராப்பள்ளி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண். 4262/2018/இ1)<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்:378 அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>30.03.2020</td><td>25</td><td>துறையூர் நகராட்சியில் கணினி பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் 5KVA UPS (No:2K310WB115)-க்கான ஆண்டு பராமரிப்பு 30.04.2020 உடன் முடிவடைய உள்ளது. ஆதலால் மீண்டும் ஒருவருடம் 01.05.2020 முதல் 30.04.2021 வரை மேற்படி UPS-யை ஆண்டு பராமரிப்பு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள</td><td>தீர்மான எண்:379 அனுமதிக் கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.10000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.986/2013/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | |
| 30.03.2020 | **26** | துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட விஸ்தரிப்பு பகுதிகளான சுந்தராபுரம், சாமிநாதன் நகர், முத்துநகர் மற்றும் Bypass தெற்கு பகுதி ஆகிய பகுதிகளில் தெரு விளக்குகள் புதிதாக அமைக்க ரூ.9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மேற்படி பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-18 நிதியிலிருந்து மேற்கொள்ள, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை உத்தரவு எண்.2714/2017/அ3 நாள்.28.12.2017-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதிகளில் தெருவிளக்கு அமைக்கும் பணிக்கு புதிய மின் இணைப்பு வளர்ச்சிக்கட்டணம், மதிப்பீட்டு கட்டணம் மற்றும் வைப்புத்தொகை கட்டணம் ரூ.2,32,732/- என தமிழ்நாடு மின்சார வாரியம், துறையூர் அவர்களின் கேட்பு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் பெரும்பாலும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமைந்துள்ளது. மேலும் ஒருசில அங்கீகரிக்கப்படாத மனைகள் தற்போது அரசாணை எண்.78 நாள்.04.05.2017 (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை)-யின் படி வளர்ச்சி கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு மனைகள் வரன்முறை செய்யப்பட்டு வருகிறது. மனை வரன்முறை செய்து வசூலிக்கப்படும் வளர்ச்சிக் கட்டணம் இந்நகராட்சி பொது நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்படி பணியானது பொதுமக்களின் அத்தியாவசிய பணியாக மேற்கொள்ளப்படுவதால் இப்பணிக்கான வளர்ச்சிக்கட்டணம், மதிப்பீட்டு | தீர்மான எண்:380 அனுமதிக் கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டணம் மற்றும் வைப்புத்தொகை ரூ.2,32,732/-யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தலாம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண்.1829/2017/இ1)<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.03.2020 | **27** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி, பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.28369/ஜெ3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோர்சிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண். 303 நாள். 17.12.2019ல் 01.01.2020 முதல் 31.03.2020 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை தடுப்பு பணியாக 144 ஊரடங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் செயல்பட்டு வருகிறது. சமூக விலகல் உள்ளதால் மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதாலும் பொது மக்கள் பொது சுகாதாரம் நலன் கருதி மேற்படி பணிகளுக்கு 01.04.2020 முதல் 31.6.2020 வரை ( மூன்று மாதங்கள் ) சுய உதவிக் குழுக்கள் 32பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களின் 2017-18 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.295 அடிப்படையில் ரூ.9,00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்டுள்ள சுகாதார பணிகளை இந்நகராட்சி செவலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்:381 அனுமதிக் கப்பட்டது |
| 30.03.2020 | **28** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க. எண். 28369/து3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோசிங் | தீர்மான எண்:382 அனுமதிக் |

| | | | |
|---|---|---|---|
| | | முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது இதனை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.301 நாள். 17.12.2019 ல் 01.01.2020 முதல் 31.03.2020 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை தடுப்பு பணியாக 144 ஊரடங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் செயல்பட்டு வருகிறது. சமூக விலகல் உள்ளதால் மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதாலும் திடக்கழிவு மேலாண்மை பணி, சுகாதார பணிகள், நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கும், பொது மக்கள் பொது சுகாதாரம் நலன் கருதி மேற்படி பணிகளுக்கு 01.04.2020 முதல் 31.06.2020 வரை (மூன்று மாதங்கள்) சுய உதவிக் குழுக்கள் மூலம் நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கு 24 பணியாளகளை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களின் 2017-18 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.295 அடிப்படையில் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்டுள்ள சுகாதார பணிகளை இந்நகராட்சி செவலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>**அ.கு :** மன்றம் அனுமதிக்கலாம். | கப்பட்டது |
| 30.03.2020 | **29** | துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மற்றும் குடும்ப நலம் திருச்சிராப்பள்ளி அவர்களின் ந.க.எண்.27-அ3-2017 நாள். .06.2017ன் கடிதத்தில் டெங்கு சிக்கன்குனியா கட்டுப்பாட்டு கொசு ஒழிப்பு பணி தொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக (demositic breeding checker) களப்பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண்.303 நாள். 17.12.2019 ல் 01.01.2020 முதல் 31.03.2020 முடிய 3 மாதங்களுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நிலா சுய உதவிக்குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்பொழுது கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவி வருவதை தடுப்பு பணியாக 144 ஊரடங்கு தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் | தீர்மான எண்:383 அனுமதிக் கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | செயல்பட்டு சமூக விலகல் உள்ளதாலும் மனித ஆற்றல் சப்ளை செய்திட ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதாலும் இந்நகராட்சி 24 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கையாக ஒவ்வொரு வீடுகளாக சென்று source reduction பணி மேற்கொள்ளவும் மற்றும் கொசு புழு ஆதாரங்களை அதன் ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து அபேட் மருந்திட்டு அழிக்கவும் முதிர் கொசுக்களை கொசு புகைமருந்து அடிப்பான் இயந்திரங்கள் கொண்டு அழித்திடவும் மற்றும் தெருக்களில் பயனற்ற வகையில் உள்ள டயர்கள், உடைந்த மற்றும் தேவையற்ற பிளாஸ்டிக் தென்னைமட்டை, கொட்டாங்குச்சி, கண்ணாடி பொருட்கள், ஆட்டு உரலில் தேங்கியுள்ள நாள்பட்ட தண்ணீரை நீக்குதல் மற்றும் அரசு மற்றும் அரசு சாரா தனியார் அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் குடிநீர் தொட்டிகள் சுத்தமாக வைத்துள்ளதை உறுதி செய்தல், நகராட்சி எல்லைக்குட்பட்ட மருத்துவமனைகளை சுகாதாரமாக வைத்துள்ளதை உறுதி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் டெங்கு காய்ச்சல் முன் தடுப்பு நடவடிக்கை மற்றும் கொரோனா தொற்று நோய் பராவமல் இருக்க உரிய நடவடிக்கைகளுக்கு 30 களப்பணியாளர்களை 01.04.2020 முதல் 31.06.2020 நியமித்து கொள்ளவும் மேற்கண்ட பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் விலைவிகிதப் விலைவிகிதத்தில் அமர்த்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.8.00 லட்சதிற்கு மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2177/13/எச்1)<br>**அலுவலக குறிப்பு**: இப்பணியின் அத்தியாவசிய தேவையினை கருத்தில் கொண்டு 01.04.2020 முதல் 31.06.2020 முடிய 3 மாதங்களுக்கு உள்ளூரில் இயங்கி வரும் மகளிர் சுய உதவிக்குழுக்களை கொண்டு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 30.03.2020 | **30** | துறையூர் நகராட்சியில் சாலை சீரமைப்பு கட்டணம் 2019-20ம் ஆண்டுக்கு கீழ்கண்ட விபரப்படி நிர்ணயம் செய்து புதிய குடிநீர் இணைப்பு பெறும் வீட்டு உரிமையாளகளிடம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அதன் விபரம்.<br>நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் \| கருங்கல் ஜல்லி சாலை ரூ. \| தார்சாலை ரூ. \| சிமெண்ட் சாலை ரூ. | தீர்மான எண்:384 அனுமதிக் கப்பட்டது |

| 0-30 மீட்டர் நீளத்திற்கு | 2020 | 4270 | 4930 |
|---|---|---|---|
| 30-90 மீட்டர் நீளத்திற்கு | 3130 | 5370 | 6010 |

தற்பொழுது 2020-21ம் ஆண்டிற்கு சாலை சீரமைப்பு கட்டணம் 5% உயர்வு செய்து இவ்வாண்டில் புதிய குடிநீர் இணைப்பு பெறும் வீட்டு உரிமையாளர்களிடம் வசூல் செய்திட கீழ்காணும் விபரப்படி சாலை சீரமைப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது. நிர்ணயம் செய்யப்பட்ட சாலை சீரமைப்பு கட்டணம் 01.04.2020 முதல் வசூல் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் ஜல்லி சாலை ரூ. | தார்சாலை ரூ. | சிமெண்ட் சாலை ரூ. |
|---|---|---|---|
| 0-30 மீட்டர் நீளத்திற்கு | 2130 | 4490 | 5180 |
| 30-90 மீட்டர் நீளத்திற்கு | 3290 | 5640 | 6320 |

( ந.க.எண்.1156/2018/இ2)

**அலுவலக குறிப்பு** :

சாலை சீரமைப்பு கட்டணம் 2019-20ம் ஆண்டு கட்டணத்தில் 5% உயர்வு செய்து 2020-21ம் ஆண்டுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலை சீரமைப்பு கட்டணத்தை 01.04.2020 முதல் வசூல் செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 30.03.2020 | **31** | துறையூர் நகராட்சியில் கொரோனா தொற்று நோய் பரவல் தடுப்பு முன் நடவடிக்கை பணிக்காக கீழ்க்கண்ட சுகாதார கிருமி நாசினிகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் வாங்க 28.03.2020 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. | தீர்மான எண்:385 அனுமதிக் கப்பட்டது |

| வ. | பொருள் | அளவு | திருமலை | ஸ்ரீஅக்யா | ஸ்ரீஅம்மன் |
|---|---|---|---|---|---|

| எ ண். | விபரம் | | டிரேடர்ஸ், எப்எப்.3 ரெங்கா காம்ப்ளக்ஸ், ரம்பா தியேட்டர் திருச்சி | டிரேடர்ஸ், 4/10, கிழக்கு சாராயப் பட்டறை உறையூர் திருச்சி | ஏஜென்ஸிஸ், 1/3856/1 கோகுலம் காலணி பிச்சாண்டவர் கோவில் டோல்கேட், திருச்சி |
|---|---|---|---|---|---|
| 1 | Bleaching Powder(Gr.-1) | 1kg | 55.00 | 59.00 | 64.00 |
| 2 | Lizol | 1Litre | 175.0 | 179.00 | 185.00 |
| 3 | Hypo Chloride | 1Litre | 35.00 | 42.00 | 47.00 |
| 4 | Lime Powder | 1kg | 9.975 | 11.00 | 13.50 |
| 5 | Apron Coat | 1No | 2500 | 2650 | 2800 |
| 6 | Reflecting Jacket | 1NO | 320.00 | 350.00 | 375.00 |
| 7 | Latex Hand Gloves | 1NO | 90.00 | 110.00 | 125.00 |
| 8 | Hand Gloves | 1NO | 240.00 | 260.00 | 280.00 |
| 9 | Power Spraver | 1NO | 5800.00 | 6000.00 | 6250.00 |
| 10 | Mini Spraver | 1NO | 336.00 | 345.00 | 360.00 |

(ந.க.எண்.810/2020/H1)

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திருமலை டிரேடர்ஸ், எப்எப்.3 ரெங்கா காம்ப்ளக்ஸ், ரம்பா தியேட்டர் திருச்சி அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். மேலும் கொரோனா தொற்று நோய் பரவல் தடுப்பு முன் நடவடிக்கை பணிக்க மேற்கண்ட சுகாதார கிருமி

நாசினிகள் மற்றும் சுகாதார பொருட்கள் அவசியம் தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர்/ஆணையரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கும் குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கியமைக்கும்,இதற்கான செலவினத்தினை SDRF (COVID-19)நிதியின் கீழ் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

30.03.2020

**32**

துறையூர் நகராட்சியில் கொரோனா தொற்று நோய் பரவல் தடுப்பு முன் நடவடிக்கை பணியாக கீழ்க்கண்ட சுகாதார கிருமி நாசினிகள் மற்றும் சுகாதார பொருட்கள் தமிழ் நாடு மல்டிபர்பஸ் நிறுவனம் திருச்சி அவர்களிடம் வாங்கியமைக்கு மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பொருள் விபரம் | அளவு | வி லை | தொ கை | சி.ஜி.எ ஸ்டி. | எஸ்.ஜி. எஸ்.டி | மொத் த தொ கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு | 5000 கிலோ | 9,70 | 48500.00 | 1212.20 | 1212.20 | 50925.00 |
| 2 | பீளிச்சிங் பவுடர் | 1000 கிலோ | 45,00 | 45000.00 | 4050.00 | 4050.00 | 53100.00 |
| 3 | லைசால் | 200 லி | 149.0 0 | 29800.00 | 2862.00 | 2862.00 | 35164.00 |
| 4 | பினாயல் | 500 லி | 70.00 | 35000.00 | 3150.00 | 3150.00 | 41300.00 |
| 5 | ஸ்பிரேயர்(சிறி யது) | 15 எண்ணிகை | 48.50 | 72750.00 | 6547,50 | 6547,50 | 85845,00 |
| 6 | முககவசம் | 500 எண்ணிக் கை | 45.00 | 22500.00 | 562.50 | 562.50 | 23625,00 |

தீர்மான எண்:386 அனுமதிக் கப்பட்டது

<table>
<tr><td></td><td></td><td>(ந.க.எண்.810/2020/H1)<br>அலுவலக குறிப்பு<br>கொரோனா தொற்று நோய் பரவல் தடுப்பு முன் நடவடிக்கை பணிக்காக மேற்கண்ட் சுகாதார கிருமி நாசினிகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக தமிழ் நாடு மல்டிபர்பஸ் நிறுவனம் திருச்சியில் வாங்கியமைக்கும் அதற்கான செலவினத்தினை SDRF(COVID-19) நிதியின் கீழ் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>30.03.2020</td><td>33</td><td>துறையூர் நகராட்சியில் கொரோனா தொற்று நோய் பரவல் தடுப்பு முன் நடவடிக்கை பணிக்காகTATA ACE வாகனத்தில் சென்செட் மூலம் சின்டெக்ஸ் டேங்க் வைத்து கிருமி நாசினி தெளிக்க 4 எண்ணிக்கையில் சின்டெக்ஸ் டேங்க் வாங்க 28.03.2020 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பொருள் விபரம்</th><th>அளவு</th><th>ஈஸ்வரன் எலக்ட்ரிக்கல்ஸ், 364 திருச்சிரோடு துறையூர்</th><th>பி.பி. எஸ். எலக்ட்ரிக்கல்ஸ், எம்.எஸ்.கே. மஹால் திருச்சிரோடு துறையூர்</th><th>ஜெய் எலக்ட்ரிக்கல்ஸ், 6 நகராட்சி அலுவலக காம்ப்ளக்ஸ், துறையூர்</th></tr>
<tr><td>1</td><td>1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கருப்பு சின்டெக்ஸ் சப்ளை செய்தல்</td><td>1NO</td><td>7<br>400</td><td>7500</td><td>7700</td></tr>
</table></td><td>தீர்மான எண்:387<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>CGST 6%</td><td></td><td>444</td><td>450</td><td>462</td></tr>
<tr><td></td><td>SGST 6%</td><td></td><td>444</td><td>450</td><td>462</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>8288</td><td>8400</td><td>8624</td></tr>
</table>
(ந.க.எண்.810/2020/H1)<br>
அலுவலக குறிப்பு<br>
வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ஈஸ்வரன் எலக்ட்ரிக்கல்ஸ், 364 திருச்சிரோடு துறையூர் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். மேலும் கொரோனா தொற்று நோய் பரவல் தடுப்பு முன் நடவடிக்கை பணிக்க மேற்கண்ட சுகாதார கிருமி நாசினிகள் தெளிக்க சின்டெக்ஸ் டேங்க் அவசியம் தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர்/ஆணையரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கும் குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கியமைக்கும், இதற்கான செலவினத்தினை SDRF(COVID-19) நிதியின் கீழ் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.03.2020</td>
<td>34</td>
<td>
துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மைம திட்டத்தின் கீழ் வீடு வீடாக மக்கும் மக்காத கழிவுகள் பிரித்து வாங்க இந்நகராட்சிக்கு 6 டாடா ஏ.சி. வாகனங்கள் கீழ்க்கண்டவாறு வாங்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>வண்டி எண்.</th><th>வாங்கப்பட்ட நாள்</th></tr>
<tr><td>01</td><td>TN48AT8975</td><td>28.11.2018</td></tr>
<tr><td>02</td><td>TN48AT8984</td><td>28.11.2018</td></tr>
<tr><td>03</td><td>TN48AT8893</td><td>28.11.2018</td></tr>
<tr><td>04</td><td>TN48AT8966</td><td>28.11.2018</td></tr>
<tr><td>05</td><td>TN48AT8908</td><td>28.11.2018</td></tr>
<tr><td>06</td><td>TN48AT8950</td><td>28.11.2018</td></tr>
</table>
மேற்கண்ட 6 வாகனமும் வாங்கப்பட்டு ஓர் ஆண்டுக்கு மேல்
</td>
<td>தீர்மான எண்:388 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

ஆகிவிட்டப்படியால் மேற்கண்ட வாகனங்களில் உள்ள சிறுசிறு பழுதினை நீக்கம் செய்ய டாடா ஏசிஇ டீலரான ரகீமா மோட்டார் துறையூர் நிறுவனத்தில் பழுது நீக்கம் செய்யப்பட்டமைக்கு Invoice No.1920057,1920058,1920059,1920060,dt.10.7.2019,1920061,1920062.dt.11.7.2019,1920111dt.21.9.2019,1920186,1920187dt.4.01.2020ன்படிவரப்பெற்ற பில் பட்டியல் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| Sl. No | Vehicle No. | Invoice No | Date | Particulars | Amount |
|---|---|---|---|---|---|
| 1 | TN48AT8908 | 1920057 | 10.07.2019 | **SPARE PARTS DETAILS** TMGO C14 P 15W40 | 550 |
| | | | | F006 OIL & FUEL FILTER KIT 885499092829 ACE | 349 |
| | | | | B611 GEAR LEAVER BUSH KIT 885426012829 ACE | 215 |
| | | | | WASTE 01 | 15 |
| | | | | C102 KIT CL/PR PLATE W/BRG 885425102829 TATA ACE | 2700.01 |
| | | | | **LABOUR CHARGE DETAILS** FREE SERVICE 1, CLUTCH PLATE CHECK/REPLACE | 590 |
| | | | | DOOR LOCK REPLACEMENT | 118 |
| | | | | GEAR ROD BUSH REPLACEMENT | 177 |
| | | | | **மொத்தம்** | 4714,01 |
| 2 | TN48AT8966 | 1920061 | 11.07.2019 | **SPARE PARTS DETAILS** TMGO C14 P 15W40 | 550 |
| | | | | FOO6 OIL & FUEL FILTER KIT 885499092829 ACE | 349 |
| | | | | WASTE 01 | 15 |
| | | | | H005 HOSE 278809135805 ACE | 390 |
| | | | | **மொத்தம்** | 1304 |
| 3 | TN48AT8893 | 1920062 | 11.07.2019 | **SPARE PARTS DETAILS** TMGO C14 P 15W40 | 550 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | FOO6 OIL & FUEL FILTER KIT 885499092829 ACE | 349 |
| | | | | WASTE 01 | 15 |
| | | | | **மொத்தம்** | 914 |
| 4 | TN48AT8984 | 1920060 | 10.07.2019 | **SPARE PARTS DETAILS** TMGO C14 P 15W40 | 550 |
| | | | | FOO6 OIL & FUEL FILTER KIT 885499092829 ACE | 349 |
| | | | | WASTE 01 | 15 |
| | | | | **LABOUR CHARGE DETAILS** AL-ALIGNMENT | 236 |
| | | | | WATER SERVICE | 118 |
| | | | | **மொத்தம்** | 1268 |
| 5 | TN48AT8975 | 1920059 | 10.07.2019 | **SPARE PARTS DETAILS** TMGO C14 P 15W40 | 550 |
| | | | | FOO6 OIL & FUEL FILTER KIT 885499092829 ACE | 349 |
| | | | | WASTE 01 | 15 |
| | | | | **LABOUR CHARGE DETAILS** AL-ALIGNMENT | 236 |
| | | | | WATER SERVICE | 118 |
| | | | | **மொத்தம்** | 1268 |
| 6 | TN48AT8950 | 1920058 | 10.07.2019 | **SPARE PARTS DETAILS** TMGO C14 P 15W40 | 550 |
| | | | | FOO6 OIL & FUEL FILTER KIT 885499092829 ACE | 349 |
| | | | | ANABOND PASTE 666T-MAX | 55 |
| | | | | BEARING 6204 2RS ACE | 251 |
| | | | | S048 SEAL 20X35X10 STREEING | 75 |
| | | | | WASTE 01 | 30.01 |
| | | | | **LABOUR CHARGE DETAILS** AL-ALIGNMENT | 236 |
| | | | | **மொத்தம்** | 1546.01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | TN48AT8984 | 1920111 | 21.09.2019 | **SPARE PARTS DETAILS**<br>STREEING BOX OIL SEAL ACE | 105 |
| | | | | BEARING 6204 2RS ACE | 258 |
| | | | | G041 GASKET FOR STREEING BOX ACE | 9.99 |
| | | | | O012 OIL 80W90 1 Ltr SHELL | 155 |
| | | | | **LABOUR CHARGE DETAILS**<br>STEERING BOX R/R | 354 |
| | | | | STEERING BOX OVERHAULING | 590 |
| | | | | **மொத்தம்** | 1471.99 |
| 8 | TN48AT8950 | 1920187 | 04.01.2020 | **SPARE PARTS DETAILS**<br>TMGO C14 P 15W40 | 200 |
| | | | | F005 ASSY OIL FILTER 279018130101 ACE | 140 |
| | | | | WASTE 01 | 30 |
| | | | | WASHER 285126708204 | 24 |
| | | | | **LABOUR CHARGE DETAILS**<br>OIL LEAKAGE | 118 |
| | | | | DIESEL LEAKAGE | 118 |
| | | | | AIR FILTER CLEANING/LINE CHECK | 118 |
| | | | | **மொத்தம்** | 748 |
| 9 | TN48AT8908 | 1920186 | 04.01.2020 | **SPARE PARTS DETAILS**<br>STREEING BOX ACE | 5155.99 |
| | | | | **LABOUR CHARGE DETAILS**<br>STEERING BOX R/R | 531 |
| | | | | **மொத்தம்** | 5686.99 |
| | | | | | 18921,00 |

மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள தொகை ரூ.18921/-ஐ Rahama Motor

<table>
<tr><td></td><td></td><td>துறையூர் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>கோப்பு எண். 1271/2020/எச்1<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினம் திடக்கழிவு மேலாண்மை (SUG) நிதியில் இருந்து மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>30.03.2020</td><td>35</td><td>துறையூர் நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் ESCO M/S சபரி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம் மூலம் இந்நகராட்சி அலுவலக செயல்முறைகள் உத்திரவு ROC.No.624/E1/2014 நாள்.02.01.2018ன்படி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளின்படி இந்நகராட்சிக்குட்பட்ட 1492 எண்ணிக்கை தெருவிளக்கு Fittings-களின் பராமரிப்பு பணிகளை M/S சபரி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம் 03.01.2018 முதல் மேற்கொண்டு வருகிறது.<br>M/S சபரி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம் 03.01.2018ல் பராமரிப்பு பணியினை மேற்கொள்ளும் முன்னர் இந்நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளை Pre Audit செய்தபோது இந்நகராட்சியில் இருந்த 1864 மின்கம்பங்களில் 1492 மின்விளக்குகள் இருந்தமையை கணக்கில் கொண்டு, அடியிற்கண்ட அட்டவணை 1ல் உள்ளவாறு இந்நகராட்சி பகுதிகளில் பணி மேற்கொள்ள வேலை உத்தரவு பெற்று இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வருகிறார்கள்.<br>அட்டவணை 1.
<table>
<tr><th>SL.No</th><th>Type of Street lights</th><th>No of Available</th></tr>
<tr><td>1</td><td>Sodium Vapour lamp (250 W)</td><td>135</td></tr>
<tr><td>2</td><td>40 W Tube Light Fittings</td><td>1342</td></tr>
<tr><td>3</td><td>85 CFL Lamps</td><td>1</td></tr>
<tr><td>4</td><td>90 W LED Fittings</td><td>14</td></tr>
<tr><td></td><td>TOTAL</td><td>1492</td></tr>
</table>
இதன் பிறகு துறையூர் நகராட்சிக்குட்பட்ட விரிவாக்க பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி</td><td>தீர்மான எண்:389<br>அனுமதிக் கப்பட்டது</td></tr>
</table>

திட்ட நிதி மற்றும் இந்நகராட்சி பொதுநிதி ஆகியவற்றின் கீழ் கீழ்கண்ட விபரப்படி புதிதாக LED தெருமின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.**

| **வ.எண்** | **மின்விளக்கு வகை** | **வாட்ஸ்** | **LED விளக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | செண்டர் மீடியன் | 90W | 72 |
| 2 | உயர்மின் கோபுர விளக்கு | 120W | 19 |
| | | 150W | 40 |
| 3 | தெருமின் விளக்குகள் | 20 W | 115 |
| | | 60W | 30 |
| | | **மொத்தம்** | **276** |

இவ்வாறாக புதிதாக அமைக்கப்பட்டுள்ள 276 LED மின் விளக்குகளையும் ஏற்கனவே உள்ள 1492 விளக்குகளுடன் இணைக்கும் பொழுது ஏற்படும் மொத்த விளக்குகளின் எண்ணிக்கை 1768, இவை Investment Grade Audit Report-ல் அனுமதிக்கப்பட்டுள்ள 1864 மின்கம்பிகளுக்கு உள்ளேயே வருவதால் இதற்கான பராமரிப்பு பணியை தற்போது பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் M/S சபரி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.624/2014/இ1)

**அலுவலக குறிப்பு** :

1. இந்நகராட்சியில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு மின் பணியாளர்கள் எவர் ஒருவரும் இல்லாததால் மேற்படி கூடுதலாக உள்ள 276 தெருமின்விளக்குகளின் பராமரிப்பு பணியினை, ஏற்கனவே 1492 எண்ணிக்கை தெருமின்விளக்குகளை பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் M/S சபரி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | 2. மேற்படி பராமரிப்பு பணிக்கான செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |

ஒம்/-து.தமயந்தி
தனி அலுவலர்

/உண்மை நகல் /

ஆணையர்(பொ),
துறையூர் நகராட்சி